உ

ஸ்ரீராமஜெயம்






இயக்கச்சி

# மல்வில் கிருஷ்ணன் கோவில்

அறங்காவலர் தின வெளியீடு



# சுதர்சனம்

2023

சுதர்சனம் 2


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உ

ஸ்ரீராம ஜெயம்

## திருவருள்மிகு
## மல்வில் கிருஷ்ணன் கோயில்
## இயக்கச்சி



தர்மகர்த்தா கார்த்திகேசு சின்னத்தம்பி

நினைவு அறக்கட்டளை வெளியிடும்

# சுதர்சனம்

(சின்னத்தம்பி ஐயாவின் 15-ம் ஆண்டு நினைவு நாள்)

**- 2023 -**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சுதர்சனம்

## உள்ளே..

1. மல்வில் கிருஷ்ணன் கவிதைகள் - 1985
2. மல்வில் கிருஷ்ணன் திருவூஞ்சல் பா -2013
3. மல்வில் கிருஷ்ணன காணங்கள் -2015,2017
4. மல்வில் மாயவன் கீதங்கள் -2017
5. மல்வில் மாயவன் அருட்பாமாலை -2019
6. ஆனந்த கானம் 2022
7. மல்வில் நாயகனே -2023

மல்வில் மாயவன் மீது மாயவன் அடியார்கள் கொண்ட

பற்று, பக்தி காரணமாக வரைந்த

* அருட் கவிகள்
* அருட்பாக்களின்

தொகுப்பு



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உ

சிவமயம்

பேராலையூர் ஆசிரியமணி

நல்லதம்பி தாமோதரம்பிள்ளை அவர்களின்

எண்ணத்திலிருந்து

# மல்வில் கிருஷ்ணன் கவிதைகள்

## விநாயகர் துதி

பேராலை விநாயகனே
பெருவயிறன் கணபதியே
காராளர் ஏத்தும் எங்கள்
கற்பக விநாய கனே.

ஆராரோ ஆரிவரோ
என்றென்னைத் தாலாட்டி
சீராட்டி வளர்த்த அன்னை
பூமாலை சாத்தி டென்றாள்.

பூமாலை சாத்தியே
மாயவனை ஏத்திடும் நான்
பாமாலை சாத்திடவும்
நீயெனக் கருள்புரிவாய்.

மல்வில் உறைபவனே
மாயவனே உன்னை நிதம்
சொல்லில் வினையகலும்
தூயவனே கண்ணா

கண்ணா கண்ணா என்று
பாஞ்சலி கதறி அழ
வண்ண வண்ணச் சேலைநல்கி
மானமதைக் காத்தவனே



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பார்த்தனுக்குச் சாரதியாய்ப்
பாண்டவரைக் காத்தவனே
பார்தனில் எம்மை நிதம்
பக்குவமாய்க் காப்பவனே.

ஆழியவளை தன்னிலே
ஆழ்கடலில் தீர்த்தமாடி
அடியார்க் கருள் சுருக்கும்
ஆயர்பாடி மாதவனே.

மல்வில் தலம் ஒருக்கால்
வந்து தொழுமின்
மாயவன் திருவருளைப்
பெற்று உய்யுமின்.

மந்தியினம் கொஞ்சி
விளையாடும் சோலையில்
குந்தியின் மருகனவன்
கோயில் கொண்டனன்.

நாரணனார் தேவியொடு
ஆடும் வாவியில்
நாடோறும் நீராடிப்
பாவந் தொலையுமின்

கடமையைச் செய்யென்று
அன்று சொன்னவன்
கண்ணனவன் சொற்படி
நடந்து உய்யுமின்.

பச்சிலையில் பள்ளிகொள்ளும்
பரந்தாமா நீயே வந்து
பச்சிலைப் பள்ளியிலே
பள்ளிகொண்ட மாயமென்ன

எச்சிலை உண்டவனின்
மைத்துனனே கண்ணாநீயே
கற்சிலையாக நின்று
கருணை மழை பொழிவாய்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஆழியும் வளையும்
ஏந்திய கண்ணன்
ஆழிய வளையில்
ஆடுவான் தீர்த்தம்.

ஆழ்கடல் தன்னில்
ஆடியே தீர்த்தம்
மூழ்கிடேல் பிறவியில்
என்றருள் செய்வான்.

பக்தர்கள் உள்ளத்தைக்
கொள்ளை யடிப்பான்
பக்தி வலையில்
அகப்படும் மாயன்.

பள்ளித் தோழனும்
குசேலனின் வறுமை
துள்ளி ஓடிடச்
செய்தவன் கண்ணன்

கம்சனைப் போரினில்
வென்றவன் அவனே
வம்சம் தழைத்திட
அருளிடும் மாயன்.

காளிங்கன் மீது
நடமாடும் மாயன்
ஊழின் பெருவலி
போக்கிடும் மாயன்.

தாயைப் பிரிந்து
வாழ்ந்தவன் கண்ணன்.
தாய்க்குத் தாயாய்
உள்ளவன் கண்ணன்.

சேலை உரிந்திடத்
திரௌபதை கதற
வேலை அலையெனச்
சேலை அளித்தான்.

கலியுக முடிவினில்
கல்கியாய் வருவான்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

எலியுரு வாகனன்
கணபதி மாமன்

மணிஓசை கேட்கிறது - மல்வில்
மணி ஓசை கேட்கிறது
ஓம்! ஓம்! ஓமென்றெலிக்கிறது - அங்கே
ஓங்காரந் தொனிக்கிறது.

ஓங்காரத் துட் பொருளாய்க் - கண்ணன்
உலகினைக் காக்கின்றான்
காத்தருள் கண்ணனை நீர் - மல்வில்
தலமிசை தொழுவீரே

தொழுதிடும் அடியவர்க்கு - கண்ணன்
இடர்பல களைகின்றான்
இடர் பல களைந்திடவே - மல்வில்
தலமிசை வாரீரோ!

மல்வில் உறையும்
மாயவன் தன்னைச்
சொல்லித் துதிப்பவர்க்
கில்லையே துன்பம்.

சொல்லில் உறைந்து
தன் புகழ் சொல்லும்
சொல்லின் செல்வன்
மல்வில் கிருஷ்ணன்

கல்லும் கரையும்
உள்ளம் உருகும்
மல்வில் கிருஷ்ணன்
மகிமை சொல்லில்.

மல்வில் செல்லில்
இல்லில் இன்பம்
பல்கிப் பெருகும்
என்பது உண்மை.

கண்ணனைக் கண்டோம் மென்று
களிபேருவகை கொண்டு
கண்ணனின் கோயில் வாயில்
கூடினா ரடியா ரெல்லாம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கண்ணனை நானும் காணக்
கருதியே கண் திறந்தேன்
கண்ணனைக் கண்டே னில்லைக்
கற்சிலை ஒன்று கண்டேன்.

கண்ணனைக் காணக் கோடி
கண்கள் தான் வேண்டுமென்றே
கண்ணனின் கோயில் வாயில்
கதறி நான் ஏத்தி நின்றேன்.

"கண்ணனைக் காணக் கோடி
கண்கள் தான் வேண்டிடுமோ
கடமையே கண்ணாய் யுள்ளார்
கண்ணனைக் காண்பார்" என்றான்.

மல்வில் வீதியிலே
மாயவனார் தேரி லேறிச்
செல்லும் காட்சியி னைக்
கண்டு களித்திடடி.

கொட்டு மேளம் கொட்டுதடி
கோயில் மணி ஒலிக்குதடி
கட்டழகன் கண்ணனவன்
தேரிலேறி வாறாரடி.

ஆனிரையின் வண்டியிலே
அழகான தேர்சமைத்து
ஆயர்பாடி மாயவனார்
அதிலேறி வாறாரடி

அன்பெனும் வடம் பிடித்து
அரோகரா என்று சொல்ல
அன்பரின் பின்னே அவன்
ஓடி ஓடி வாறானடி.

பாலர்கள் முன் இழுக்க
முதியோர்கள் பின் இழுக்க
மாயவனார் புன் முறுவல்
செய்வதை நீ பார்த்திடடி.

போட்டி பொறாமையை நீ
பூண்டோ டழித்திடடி



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

காட்சி யளிப்பானடி
கண்ண னவன் தேரினிலே.

மாங்கல்யம் வேண்டிடுமோ
மகப்பேறு வேண்டிடுமோ
என்ன வரம் வேண்டினும் நீ
தேரடிக்கு வந்திடடி.

மனிதனாய் வாழ்ந்தது
போதுமினிக் கண்ணா
உன்னடி சேர்ந்திட
அருளுவாய் கண்ணா.

போட்டி பொறாமையின்
உருவம் - மனிதன்
போக்கிலித் தனங்களின்
புகலிடம் அவனே.

நாட்டுக் குழைக்கிறேன்
என்பான் - அவன்
நாட்டைச் சுரண்டியே
ஏப்பம் விடுவான்.

தன்பிழை தான்
உணராதான் - அவன்
பிறர் பிழை காண்பதில்
நிபுணனாய்த் திகழ்வான்.

காதலோ காதல்
என்றிடுவான் - அவன்
கடைசியில் ஸ்ரீதனக்
கதையிலே முடிப்பான்.

அன்பனே தோழனே
என்பான் - அவன்
ஆபத்து வேளையில்
கைவிட்டுச் செல்வான்.

சாதியும் சமயமும்
பேசிப் - பெரும்
சண்டைகள் செய்துமே
கோட்டிலே நிற்பான்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மாண்புடை மனிதரும்
உண்டு - அவர்
யாரெனக் கண்டிட
மீற்றரும் இல்லை.

கோவிந்தன் பெயரை நாம்
கூசாமல் கூறிடின்
நாவில் வந்துறைந் தவன்
நற்றமிழ் நல்குவான்.

கோவிந்தா! மாதவா!
மாயவா! கேசவா!
மல்வில் பதியுறை
நாராயண நமோ.

நாராயண என்று
நாவை அசைத்திடில்
ஓராயிரம் பிணி
உடனே அகலுமே.

வெம்பகை நீங்கிடும்
வீரம் தழைத்திடும்
நம்பிக்கை யோடவன்
நாமத்தைச் செப்பிடில்.

மங்களம் பொங்கிடும்
வானம் பொழிந்திடும்
சங்கொடு சக்கரன்
நாமத்தைச் செப்பிடில்.





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தனங்களப்பூர் **ஆசிரியர் வ.சின்னப்பா** அவர்களினால்

ஆக்கப்பெற்று

பச்சிலைப்பள்ளி இயக்கச்சி

மல்வில் கிருஷ்ணபெருமான் மீது பாடப்படும்

# திருவூஞ்சற் பதிகம்

## காப்பு

சீரோங்கும் ஈழவளத் திருநாட் டின்கண்
திருமாலின் உறைவிடமாய்ச் சிறப்புற்றென்றும்
பாரோங்கப் பச்சிலையும் பழமும் சூழும்
பதியாகும் மல்வில்லில் பாங்கின் மேவும்
தாரோங்கு தண்ணளியான் கண்ணன் மீது
சகலருக்கும் நல்வாழ்வு தளரா தோங்க
பேரோங்கும் ஊஞ்சலிசை இனிதே சாற்றப்
பிரணவநற் கணபதிதாள் காப்ப தாமே

## நூல்

சீரமேவு நாதவிந்து கால்க ளாகச்
சிவமேவு சக்தியுயர் சட்ட மாக
தேர்மேவு மாகமநூல் இழைய தாக
திருமேவு நால்வேதம் கயிற தாகப்
பேர்மேவும் உபநிடதம் பலகை யாக
பெருமைதரு பிரணவமாம் பீட மேறி
கார்மேவு பொழில்மல்வில் பதியில் மேவும்
கார்வண்ணத் தெழிற்கண்ணா ஆடீர் ஊஞ்சல் 1

மாமருதப் பொழிலுடையீர் ஆடீர் ஊஞ்சல்
வயங்குபெருந் திருக்குளத்தீர் ஆடீர் ஊஞ்சல்
தேமருவும் பூங்காவீர் ஆடீர் ஊஞ்சல்
திகழ்சதுர மரக்கிணற்றீர் ஆடீர் ஊஞ்சல்
தூமருந்தே திருமுகுந்தா ஆடீர் ஊஞ்சல்
சுடர்ஒளியே அச்சுதனே ஆடீர் ஊஞ்சல்
காமருங்கில் வைரவனார் காவல் செய்ய
கார்வண்ணத் தெழிற்கண்ணா ஆடீர் ஊஞ்சல். 2



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பார்த்தனுக்குச் சாரதியாய் அமர்ந்து சென்று
பாண்டவரைக் காத்தவரே ஆடீர் ஊஞ்சல்
ஊர்த்துயரை ஒழிப்பவரே ஆடீர் ஊஞ்சல்
ஒப்பில்நறு மாமணியே ஆடீர் ஊஞ்சல்
தீர்த்தும்ஆ ழியவளையில் ஆடக் கன்மத்
தீவினைகள் தீர்ப்பவரே ஆடீர் ஊஞ்சல்
கார்த்தபெருங் காவுடையீர் ஆடீர் ஊஞ்சல்
கார்வணணத் தெழிற்கண்ணா ஆடீர் ஊஞ்சல் 3

பத்தியினால் கோவிந்தா மாத வாநீ
பரிவில்அருள் தாஎன்ன வரங்கள் ஈயும்
வித்தகனே, காளிங்கண் தலைமீ தாடும்
மிகுவலியாய், மாதவனே ஆடீர் ஊஞ்சல்
சித்தியொடு முத்தியினைத் திடமாய் நல்கும்
தேவகியின் புத்திரரே ஆடீர் ஊஞ்சல்
கத்துகுரு கார்மல்வில் பதியில் மேவும்
கார்வண்ணத் தெழிற்கண்ணா ஆடீர் ஊஞ்சல். 4

சிவன்விஷ்ணு சேர்ந்துறையும் தலத்துள் ளீரே
திருமகளின் மணவாளா ஆடீர் ஊஞ்சல்
பவ வினைகள் நீக்கியருள் பாலிக் கின்ற
பரந்தாமா, கோவிந்தா ஆடீர் ஊஞ்சல்
அவ நோய்க்கு வைத்தியனாய், நல்லா சானாய்
அமைந்தருளும் மாயவனே ஆடீர் ஊஞ்சல்
கவல்வார்க்கு நற்றுணையே ஆடீர் ஊஞ்சல்
கார்வண்ணத் தெழிற்கண்ணா ஆடீர் ஊஞ்சல் 5

ஓர்உருவம் ஓர்நாமம் இல்லா தானே
உலகோம்பிக் காப்பவனே ஆடீர் ஊஞ்சல்
நீர் பெறற்காய் சீராமன் மல்வில் ஊன்றி
நிறைபுனல்கொள் தலத்தீரே ஆடீர் ஊஞ்சல்
பார் ஆளும் பரந்தாமா ஆடீர் ஊஞ்சல்
பாம்பணையில் துயில்பவரே ஆடீர் ஊஞ்சல்
ஆர்வமுடன் தொழுபவர்முன் எளிதில் தோன்றி
அருள்புரியும் மாயவரே ஆடீர் ஊஞ்சல் 6



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சிவலிங்க மீதினிலே நந்தி சேர்ந்து
திகழ்உருவம் திருத்தலத்தீர் ஆடீர் ஊஞ்சல்
பவ வினைகள் ஒளிப்பவரே ஆடீர் ஊஞ்சல்
பன்னிருநாள் உற்சவத்தீர் ஆடீர் ஊஞ்சல்
துவர்வாயீர், துளவத்தீர் ஆடீர் ஊஞ்சல்
தொல்பதியாம் மல்வில்லாய் ஆடீர் ஊஞ்சல்
அவலத்தே காப்பவரே ஆடீர் ஊஞ்சல்
அருள்புரியும் மாயவரே ஆடீர் ஊஞ்சல் 7

(துவர் - பவளம், சிவப்பு, துவளம் - துளசி)

ஓதாதான் எதுசொலினும் உவந்தே ஏற்று
உய்வளிக்கும் விஸ்ணுபிரான் ஆடீர் ஊஞ்சல்
தாதாரும் மலர்ப்பொழிலாய் ஆடீர் ஊஞ்சல்
சங்கொடுசக் கரமுடையீர் ஆடீர் ஊஞ்சல்
நாதாநற் துளபத்தார் அணியும் சீலா
ஞாலமெல்லாம் காப்பவரே ஆடீர் ஊஞ்சல்
ஆதாரம் எவ்வுயிர்க்கும் நீயே ஆகி
அருள்புரியும் மாயவரே ஆடீர் ஊஞ்சல் 8

(தாதாரும் மலர் - தாது ஆரும் மலர் - தேன் பொருந்திய மலர்)

செந்திருத்தான் தனிற்சிலம்பு செறிந்தே ஆட
திருச்செவியில் குண்டலங்கள் திகழ்ந்தே ஆட
நந்தாத எழில்மார்பில் திருவும் ஆட
நண்ணியடி யார்கூட்டம் நயப்போ டாட
சுந்தரனே அச்சுதனே ஆடீர் ஊஞ்சல்
துளபத்தார் நாயகனே ஆடீர் ஊஞ்சல்
அந்தார்கள் திருக்கழுத்தில் பலவாய் ஆட
அருள்புரியும் மாயவரே ஆடீர் ஊஞ்சல் 9

நந்தாத- எழில் குறையாத அழகு, நண்ணி - வணங்கி நெருங்கி, துளபத்தார் - துளசி மாலை அந்தார்கள் - அழகிய மாலைகள், திரு - இலக்குமி)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சத்யபா மாவினொடு ருக்ம ணித்தாய்
சார்ந்திலங்கு மகாவிஷ்ணு ஆடீர் ஊஞ்சல்
பத்துத்தர ஐந்தேக்கர் குளத்தைக் கொண்ட
பதியாளும் பரந்தாமா ஆடீர் ஊஞ்சல்
எத்திசையும் புகழ்மணக்க இன்பம் ஓங்க
எழுந்தருளும் கோவிந்தா ஆடீர் ஊஞ்சல்
அத்தனொடும் ஒருங்கமர்வீர ஆடீர் ஊஞ்சல்
அருள்புரியும் மாயவனே ஆடீர் ஊஞ்சல்

## வாழி

நீலவண்ணன் திருவடியை நினைப்போர் வாழி
நீதிவழி நிற்பவர்கள் நித்தம் வாழி
சீலமதைக் கடைப்பிடிப்போர் சிறந்து வாழி
செந்தமிழர் குலம்வாழி, தேசம் வாழி
ஞாலமிசை சிறந்தோங்கு மல்வில் வாழி
நற்புலவர், ஆநிரைகள் நலமே வாழி
காலமெங்கும் சிறந்தோங்கி அருள்பாலிக்கும்
கண்ணனது திருத்தாள்கள் வாழி வாழி

## எச்சரிக்கை

சீரார்மல்வில் ஊராதிருத் தேவே எச்சரீக்கை
திருவார்அணி மார்பாபரந் தாமா எச்சரீக்கை
ஆராஅமு தானாய்நல்ல அழகா எச்சரீக்கை
அடியாரிடர் பொடியாக்கிடும் அமரா எச்சரீக்கை
தீரா, அவ தாராஎங்கள் திருவே எச்சரீக்கை
செயம்எய்திட அருள்தந்திடும் சீலா எச்சரீக்கை
நாராயண, காரார்நிற நாதா எச்சரீக்கை
நளினாசன எழிலார்அனு கூலா எச்சரீக்கை

## பராக்கு

ஏதமற்ற எங்கள்சிவன் மைத்துனரே பராக்கு
எங்கும்அருள் தங்கநிற்கும் முத்தெழிலே பராக்கு
நாதவடி வானஎங்கள் நாராயண பராக்கு
நான்மறையின் உட்பொருளாம் மாயவரே பராக்கு



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org


வாதமண்விண் தீபுனலாம் வடிவினரே பராக்கு
மல்வில் எனும் திருப்பதியில் உறைபவரே பராக்கு
காதலுறும் அடியர்துயர் களைபவரே பராக்கு
கண்ணபிரானே அருளும் முகுந்தா பராக்கு

## லாலி

ஆதிமுதல் ஆனகண்ணன் லாலி எம்மை
ஆண்டருள வந்தவெண்ணைக் கள்வன் லாலி
மாயன் லாலி மணிவண்ணன் லாலி வண்ண
மாகடலில் பாம்பணையான் லாலி லாலி
கார்வண்ண பூபதியே லாலி லாலி
காசூழும் மல்வில்லில் வாழ்வாய் லாலி
சீரனைத்தும் தந்தருள்வாய் லாலிலாலி
திருமகளின் மணவாளா லாலி லாலி

## மங்களம்

ஐந்துகரம் கொண்டஎங்கள் அப்பனுக்கு மங்களம்
ஆறுமுகம் தேவியர்க்கும் அரன்அரிக்கும் மங்களம்
சிம்புள்வடி வானவர்க்கு மங்களம் பத்தரை
சேரவைகிக் காவல்செய்யும் வைரவர்க்கும் மங்களம்
அம்புயத்தில் வைகும்வாணி அன்னையர்க்கு மங்களம்
ஆதிசக்தி ஆனவர்க்கு மங்களம் மங்களம்
ஆஞ்ச நேயர் சுக்கிரீவன் ஆகியோர்க்கு மங்களம்
அருள்சுரக்கும் கண்ணனுக்கும் திருமகட்கும் மங்களம்





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வடமராட்சி கிழக்கு கொடுக்குளாயூர்

**சின்னப்பு பாலா அவர்களின்**

எண்ணத்திலிருந்து

சமுத்திர தீர்த்தோற்சவ பவனி

# மல்வில் கிருஷ்ண கானங்கள்

1.

தெப்பக் குளத்தருகே தோன்றி அருள் புரிபவனே.
புன்னைத் தென்றல் தாலாட்ட புன்னகையை பூர்ப்பவனே
வில்வைதரு நிணலோரம் வீற்றிருக்கும் விண்ணவனே
சர்ப்பச் சுருள்மீது சாய்ந்து துயில் கொள்பவனே
இயக்கச்சி முகாவில் ஆழும் மல்வில் மாயவனே
மாயவனே..... மல்வில் மாயவனே.....

நமோ நமோ நாராயணா- எங்கள்
நாயகனே மதுசூதனா.
நமோ நமோ நாராயணா மல்வில்
மாயவனே கோகுலகிருஷ்ணா.

கொடுக்குளாய் வீதிக்கடற் கரைநோக்கி நகர்ந்து வாறான்
ஆவணி மாதத்திலே தீர்த்தக்கரை நாடி வாறான்.
துன்பமதை தாங்கிநிற்கும் எங்கள் குறை தீர்த்திடவே
நீலவண்ணன் ஓடிவாறான் நீந்தி விளையாட வாறான்.
ஐந்துதலை நாகமதை வாகனமாய் கொண்டமர்ந்து
அருள்முகம் காட்டி மல்வில் கண்ணன் எங்கள்வீதி வாறான்

1. நமோ நமோ நாராயணா- எங்கள்
நாயகனே..........

மண்ணையுண்ட மாயனவன் மாசார்நிலம் அளந்து வாறான்
மாயங்கள் செய்யும் மன்னன் மருதங்கேணி தாண்டி வாறான்
வத்தியராயன் தனைக்கடந்து வேம்படி அருள் பலித்து
உடுத்துறை ஊர்பார்த்து கொடுக்குளாய் நீராட வாறான்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கோகுல வதனனவன் கோபியரோ டாடியவன்
கொடுக்குளாய் நாடியவன் கோலாட்டம் ஆடவாறான்.
பார்த்தீபனின் பெருமை பாடி அடியார் தொடர
புல்லாங் குழலிசைத்து பரந்தாமன் பவனி வாறான்.

2. நமோ நமோ நாராயணா- எங்கள்
நாயகனே..........

காற்றிலெழும் கீதமெல்லாம் கண்ணன் குழலிசையே
நானெழுதும் வரிகளெல்லாம் பரந்தாமனின் வரியே
போற்றிநான் பாடிடுவேன் புருசோத்தமன் புகழே
காற்று நிற்கும் போதினிலும் காட்சியவன் திருவுருவே.

பார்க்கடலில் நீராடும் பார்த்தீபனின் அழகை
பார்த்திடவே பக்தர்படை அலையாய் அணிவகுக்கும்.
முழுமதி காய்கையிலே மாதவனே உன்மேனி
நீலவண்ணச் சுடரொளியாய் கண்ணுக்குள் நிறம்தொகுக்கும்.

3. நமோ நமோ நாராயணா- எங்கள்
நாயகனே..........

2.
கண்ணா மணி வண்ணா மன்னா நீல வண்ணா
இயக்கச்சி மண்ணிலே முகாவில் தன்னிலே
கோவில் நீ கொண்டவனே.பச்சிலைப் பள்ளியில்
உச்சி மண் நின்றருள் ஆட்சியை செய்பவனே.

தாமரைக் குளத்திலே கோபியரோடு நீர்
ஆடிடும் மாயவனே.
தானுறங்க ஒரு சர்ப்பத்தை பாயாக
தன்னகம் கொண்டவனே.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மாயவா மல்வில் மாயவா.. தூயவா எங்கள் தாயகா
(கண்ணா)

சக்கரம் கையேந்தி எக்குறை செய்யினும்
காக்கின்ற காவலனே.
முக்காலம் வந்து உன் முற்றத்தில் நிற்போரின்
முன்வினை தீர்ப்பவனே.

பாற்கடல் மீதிலே பள்ளி கொண்டே எங்கள்
பாவங்கள் போக்கிட வா...
நீரிலும் போரிலும் துயர்கொண்ட எங்களின்
வலிதீர்க்க ஓடிநீ வா... கண்ணா வலிதீர்க்க ஓடிநீ வா...

மாயா மல்வில் மாயவா.. தூயவா எங்கள் தாயகா (கண்ணா)

மாயவனே உந்தன் வில்வைமர நிழல்
தீராத நோய் தீர்க்குமே - ஆங்கே
அல்லிக் குளத்திலே முங்கி எழுந்ததும்
முன்பிணி தேய்ந்திடுமே.

திருவிழா காலத்தில் திருவீதி வலம்காண
கால்களுன் படி நாடுமே. உந்தன்
திருமேனி நீராடும் ஆவணித் தினம் காண
ஒருகோடி விழி வேண்டுமே.

கண்ணன் திரு லீலைகளை சொல்லிநின்று பாடிடுவோம்
கடல் நீராடையிலே மெய்யுருகி நாம் தொழுவோம்
கட்டுமரமேறிக் கண்ணன் ஆழக் கடலாடையிலே
பார்த்தவிழி பனிக்குமடா பூத்த நெஞ்சும் இனிக்குமடா.

பக்தர்படை சூழவந்து தீர்த்த நீராடிவிட்டு
வாகனத்தில் வந்தமர்வாய் சிந்தையது குளிருமடா.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஆழிநீர் ஆடிவிட்டு அன்பர்குறை தீர்த்துவிட்டு
ஆழியூர் வீதிவழி நீபோகும் அழகுதனி.

கண்ணா... கண்ணா. வண்ணா.... நீலவண்ணா.
கிருஷ்ணா... கிருஷ்ணா. கிருஷ்ணா... கார்மேக வண்ணா.

## 3.மாயவன் வருகின்றான்

மாயவன் வருகின்றான் - மல்வில்
மாயவன் வருகின்றான்.
புல்லாங் குழலிசை காதில் தேன்வார்க்க
மன்னவன் வருகின்றான் மல்வில்
மாயவன் வருகின்றான

கண்ணன் வருகின்றான் - எங்கள்
கண்ணன் வருகின்றான்.
ஆழியில் பள்ளிகொண்ட ஆதிகேசவன்
தூளியில் ஆடுகின்றான் - இன்று
ஆழிநீர் ஆடுகின்றான்.

(மாயவன்)

தாமரைக் குளத்து ஓரத்திலே கண்ணன்
குழலிசை கேட்கிறது.
கோபியரோடு மாயன் செய்திடும் சேட்டைகள்
மனதிலே பூக்கிறது
ஞாயிறு தோறும் மல்வில் மாயவன் கோவில்
மணியிசை ஒலிக்கின்றது.
மனதில் வலிக்கின்ற கவலைகள் எல்லாமே
பனியாய் கரைகிறது.

(மாயவன்)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வாடிய நேரத்தில் ஓடிவரும் கண்ணன்
அருள்மழை பொழிகின்றான்.
நாடிய அடியோர்க்கு தேடிவந்து மன்னன்
நன்மைகள் புரிகின்றான்.
தினமும் அவன்புகழ் பாடிடும் பக்தருக்கு
தீராதநோய் தீர்க்கின்றான்.
தீர்த்தக் கரைநாடி கால்நடை புரிவோர்க்கு
தீமைகள் போக்குகின்றான்.

(மாயவன்)

4.மனசு மயங்கிடும் மாலையிலே

மனசு மயங்கிடும் மாலையிலே - அந்த
மல்வில் மாயவன் சாலையிலே
சிறகு விரிக்குதே இதயம் - எந்தன்
சிந்தையில் திருமால் உதயம்

பறவை இனங்களின் ஓசையிலே - கண்ணன்
துயிலும் நிலைகாணும் வேளையிலே
தென்றல் தேகம்தனைத் தளுவையிலே - திரு
மாலின் முகம்நெஞ்சில் பதிகிறதே.

(மனம்)

நீலவண்ணன் திருமாலின் வண்ணம் தினம்
நினைவில் வந்து இசை கோர்க்கிறதே
கோடி பொளிருந்தும் வாடும் உள்ளமவன்
கோவில் தினம்நாடிப் போகிறதே.
மல்வில் மாயவா ஆழிவாசகா
உன்னை தினம் பாடும் அருள்வரம் தா.
புன்னை முதல்வனே வில்வை அழகனே
என்னை உன்விழியுள் சேர்த்திடவா.

(மனம்)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வான நீள்வெளியில் காணும் திசையெங்கும்
மாயக் கண்ணன் வண்ணம் தெரிகிறது
வாழ்வின் துயர்தேய வாகை நிலைகாண
மாயன் வழியென்று புரிகிறது.
தேவர் தேவனே ராதை ரமணனே
உள்ளம் உனைநினைந்து உருகுதையா
சற்ப வாகனனே சர்வ லோகனே
உன்னை காணவிழி பெருகுதையா

(மனம்)

**5.காலைக் கதிரின் ஒளியில் தினமும்**

காலைக் கதிரின் ஒளியில் தினமும்
கண்ணன் வதனம் காணுகின்றேன்.
மாலை நிலவில் மாயவன் குழலில்
மனது மயங்கி நான் ஏங்குகின்றேன்

சோலைத் தென்றல் தேகம் தளுவ
மாதவன் நினைவில் நீந்துகின்றேன்.
ஆலய வளவில் நீல அழகனை
நித்தமும் தேடினான் ஓடுகின்றேன்.

கேட்கிது புல்லாங் குழலிசை முன்னே
இன்னிசை எல்லாத் திசையிலும் இங்கே
கண்ணா உன்னொளி தெரியுது முன்னே
தருவாய் திருவருள் பொழிவாய் அருளே.

(காலைக்)

புலரும் பொழுத்தில் பூபாள ராகம்
புல்லாங் குழலில் கேட்கிறது.
பூவையென் நினைவில் புன்னகை நிலவன்
கண்ணனின் நினைவு மீட்கிறது



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ராதையென் மேனி ராகவன் விரலில்
வீணை நரம்பினைப் போல் தவிக்கிறது.
மல்வில் மாதவனின் தரிசனம் தினம் வேண்டி
மனது மயங்கித் தினம் துடிக்கிறது.
(காலைக்)

பக்கதர்கள் கோடி கூடிய வீதியில்
பார்த்திபன் ஊர்வலம் வருகிறது
பார்த்த என் மனது பக்தியில் உருகி
பரவசமாகி பூக்கிறது

ஆழியில் நீந்திய அழகனை நனைத்திட
ஆயிரம் மலர்கள் பொழிகிறது.
மல்வில் மாயவன் அற்புதம் காண்கையில்
பக்தியில் கண்ணீர் வழிகிறது.
(காலைக்)

6.மல்வில் மாயவன் மலரடிகாண என

மல்வில் மாயவன் மலரடிகாண என்மனதும் ஏங்குதடி -
அந்த மாதவனின் மலர்முகமே தினம்
மதிவந்து போகுதடா.மதிவந்து போகுதடா
.மல்வில் மாயவன் மலரடிகாண....

தாமரைக் குளத்தோன் திருவடி தேடியென்
நினைவுகள் ஓடுதடா - அந்த முகாவில் மன்னனின்
முகவரி வளியெந்தன்கால்தடம் போடுதடா
நின்றென் கால்கள் ஆடுதடா (மல்வில்)

தாமரை குளத்திலே நீராடி எழுந்தேன்
தீராத நோய் தீர்ந்ததுவில்லை மர நிணலில்
காலாற நடந்தேன் தேகம் சுகமானது
நீல வண்ணனை நெஞ்சிலே சுமந்தேன்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வானம் வசமானது - அந்த மல்வில் மாதவனை
தினம் வந்து தொழுதேன் எல்லாமே எனதானது
எல்லாமே எனதானது எல்லாமே எனதானது
எல்லாமே எனதானது எல்லாமே எனதானது (மல்வில்)

ஆவணி மாதத்து ஊர்வலம் பார்த்திட எந்தன் விழி ஏங்குவது
ஆழிக்கரையோரம் நீராடும் வேளையில்
கோடை மழை ஆடுது நடுநிசி நேரத்தில்
சங்கொலித்து நின்றவனை பாட மனமேங்குது

அங்கே அல்லி செந்தாமரையும் மந்தி மயிலாடக்கண்ட விழி
பூக்குது கண்ட விழி பூக்குது.மல்வில் மாயவன் மலரடிகாண
என் மனதும் ஏங்குதடி மாதவனின் மலர்முகமே
தினம் மதிவந்து போடுதடா...மதிவந்து போடுதடா....

(மல்வில்)





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

முகாவிலூர் **ஆசிரியை** *திருமதி.சந்திரகுமாரி தெசராசசிங்கம்* அவர்களின்

எண்ணித்தில் உருவான **மல்வில் மாயவன் கீதங்கள்**

# கோடி கண்கள் வேண்டும்

பச்சிலையில் பள்ளி கொள்ளும் பரந்தாமா- நீ
விரும்பி பச்சிலைப் பள்ளியிலே பள்ளிகொண்ட மாயமென்ன

மந்தியினம் கொஞ்சிவிளையாடுகின்ற சோலையிலே
மக்கள் குறை தீர்க்கவென்று மாயவனே நீ அமர்ந்தீர்

மல் என்ற வில்லை ஊன்றி மடுதனை உருவாக்கி
மல்வில்மண் செழிப்புறவே மன்னவனே ஆட்சி செய்தீர்

மருதமரச்சோலைதனில் மகிழ்ந்து நீர் குடியமர்ந்தீர்
செல்வத்திருமகளை பத்தினியாய் கொண்டவரே

செந்தாமரைக் குளத்தினிலே செழிப்புற அமர்ந்தவரே
காத்தற் கடவுளே கண்ண பிரானே

எத்தனையோ ஊர் இருக்க எங்கள் மல்வில்
மண்ணிலே விரும்பி நீர் குடியமர்ந்து லீலை செய்கின்றீர்

ஆபத்தென்று வந்து விட்டால் அச்சுதனே நீர்
செய்யும் அற்புதத்தை வார்த்தைகளால் பாடிடவே முடியாது

மருதமர விருட்சத்திலே மூர்த்தி தலம் தீர்த்தம்
கொண்டு அழகுடன் ஆட்சி செய்யும்

காட்சி கண்டு மகிழ்ந்திடவே
கோடி கண்கள் போதாதையா

****************



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## மழலைப் பாடல்

மழலைகளே மழலைகளே
மல்விலுக்கு வாருங்கள்
மாதவனார் அருள் கொடுப்பார்
மனம் திறந்து பாடுங்கள்

செந்தாமரைக் குளத்தினிலே
சிறுவர்களே நீராடி
சிரம் தாழ்ந்து கும்பிடுங்கள்
சிறப்பாக வாழவைப்பார்

மருத மரச்சோலையிலே
மணல் நிறைந்த குளக்கரையில்
மந்தியுடன் மயில் ஆட
மகிழ்ந்திடலாம் வாருங்கள்

குழந்தைகளே குழந்தைகளே
கோயிலுக்கு வாருங்கள்
கோவிந்தன் நாமம் கூற
கொடுத்திடுவான் நல் அறிவை

கண்ணனை தேடி வந்து
கரம் கூப்பி தொழுதிடுவோம்
கருணை மழை பொழிந்து - என்றும்
காத்திடுவான் கண்ணபிரான்.

******************



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இராமரும் இலக்குமணரும்

அழைத்து வந்தாரே இராமபிரான் அழைத்து வந்தாரே
தம்பி இலக்குமண னவரைஅழைத்து வந்தாரே
மீட்டு வந்தாரே இராமபிரான் மீட்டு வந்தாரே
சீதையுடன் எங்களையும் மீட்டு வந்தாரே

காவல் நின்றாரே இலக்குமணன் காவல் நின்றாரே
இராமனோடு எங்களையும் காத்து நின்றாரே
அதர்மம் தன்னை உங்கள் மண்ணில்அழித்து நின்றாரே
தர்மம் என்றும் தழைத்தோங்க அருள் புரிந்தாரே

குலங்காக்க வந்த எங்கள் தசரதன் மைந்தர்களே
களிப்புடனே செழிப்புறவே ஆட்சி செய்தாரே
அருளாட்சி செய்தாரே அருளாட்சி செய்தாரே
நீலநிறம் கொண்ட எங்கள் ராம பிரானே

நீர் நிறைந்த குளத்தருகே வீற்றிருந்திரே
செந்தாமரைகள் ஆதவனை வரவேற்கவே
செங்கமல மலர்கள்தனை தூவி நின்றோமே
மாயவனே கேசவனே மாயவனே கேசவனே .





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பேராலையூர் ஆசிரியமணி

**நல்லதம்பி தாமோதரம்பிள்ளை** அவர்களின்

## மல்வில் மாயவன் அருட்பாமாலை (இறுவெட்டு)

### காப்பு

பேராலை விநாயகனே பெருவயிறன் கணபதியே
காராளர் ஏற்றும் எங்கள் கற்பக கணபதியே
ஆராரோ ஆராரோ என்றென்னைத் தாலாட்டி சீராட்டி
வளர்த்த அன்னை பூமாலை சாத்திடென்றாள்
பூமாலை சாற்றியே பாமாலை சாற்றவும்
நீ எனக்கு அருள் புரிவாய்...

1. மல்வில் உறை மாயவன் தன்னை

மல்வில் உறை மாயவன் தன்னை
சொல்லில் துதிப்பவர் இல்லையே துன்பம் (2)
சொல்தனில் உறைந்து புகழ் சொல்லும்(2)
சொல்லின் செல்வன் மல்வில் கிருஷ்ணன் (2)
(மல்வில் உறை மாயவன்) (2)

கல்லும் கரையும் உள்ளம் உருகும் (2)
மல்வில் கிருஷ்ணனின் மகிமை சொல்லில் (2)
மாயவா கேசவா மனமுருகிப் பாட (2)
மாயவன் அருளது எங்கும் நிலைத்திடும் (2)
(மல்வில் உறை மாயவன்) (2)

மல்வில் சொல்லில் இல் இன்பம் (2)
பல்கிப் பெருகும் என்பது உண்மையே (2)
மல்வில் கண்ணனை சொல்லில் பாடினால் (2)
அல்லல்கள் நீங்கும் அதுவும் உண்மையே (2)
(மல்வில் உறை மாயவன்) (2)
(சொல்தனில் உறைந்து) (2)
(மல்வில் உறை மாயவன்) (2)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## 2.மல்வில் தலம் ஒருக்கால் வந்து தொழுமின்

மல்வில் தலம் ஒருக்கால் வந்து தொழுமின் (2)
மாயவன் திருவருளை பெற்று உயிர்மின் (2)

மந்தியினம் கொஞ்சிவிளையாடும் சோலையில் (2)
குந்தியின் மருகன் அவன் கோயில் கொண்டனன் (2)
மாயவா கேசவா மல்வில் உறை நாயகா (2)
(மல்வில் தலம்) (2)
நாரணர் தேவியொடு ஆடும் வாவியில்
நாள்தோறும் நீராடி பாவம் தொலையுமின்
மாயவா கேசவா மல்வில் உறை நாயகா (2)
(மல்வில் தலம்) (2)
கடமையைச் செய் என்று அன்று சொன்னவன்
கண்ணனவன் சொற்படி நடந்து உய்யுமின்
மாயவா கேசவா மல்வில் உறை நாயகா (2)
(மல்வில் தலம்) (2)

## 3. ஓம்.... ஓம்....மணியோசை கேட்கிறதே

ஓம்.... ஓம்....
.மணியோசை கேட்கிறதே மல்வில்
மணியோசை கேட்கிறதே
ஓம் ஓம் என்று ஒலிக்கிறதே அங்கே(2)
ஓங்காரம் தொனிக்கிறதே(2)
ஓங்கார உட்பொருளாய் கண்ணன்(2)
உலகைக் காக்கின்றான்(2)
(மணியோசை)
(ஓம் ஓம் என்று)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

காத்தருள் கண்ணனைக் காண மல்வில் தலமிசை
தொழுவீரே(2)
தொழுதிடும் அடியவர்க்கு கண்ணன் இடர்பல களைவானே(2)
இடர்பல களைத்திடவே மல்வில் தலமிசை வாரீரோ
மாயவன் கண்ணனையே மனம் உருகிக் கேளீரோ
(மணியோசை...)

காத்தோடு கண்ணன் மணியோசை காலை விடியும்
அருளோசை(2)
கோவிந்தா மாயவா நாராயணா கோபியர் கொஞ்சும் ரமணா(2)
நீலமேனி கோலம்தனிலே கோயில் கொண்டால் மல்வில்
பதியினிலே(2)
(மணியோசை..)

4. ஆழியும் வளையும் ஏந்திய கண்ணன்

ஆழியும் வளையும் ஏந்திய கண்ணன்(2)
ஆழியவளையில் ஆடுவான் தீர்த்தம்(2)
ஆழ்கடல் தன்னில் ஆடியே தீர்த்தம்
மூழ்கிடேல் திரவியில் என்றருள் செய்வான்
(ஆளியும் வளையும்)

பள்ளித்தோழனாம் குசேலனின் வறுமை(2)
துள்ளி ஓடிட செய்தவன் கண்ணன்(2)
தாயைப் பிரிந்து வாழ்ந்தவன் கண்ணன்(2)
தாய்க்கு தாயாள் உள்ளவன் கண்ணன்(2)
(ஆளியும் வளையும்)

சேலை உரித்திட திரௌபதை கதற(2)
வேலை அலையென சேலை அளித்தாய்(2)
கம்சனைப் போரில் வென்றவன் அவனே(2)
வம்சம் தளைத்திட அருளிடும் மாயன்(2) (ஆழியும் வளையும்)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

காளிங்கன் மீது நடமாடும் மாயவன்(2)
ஊழியன் திருவடி போக்கிடும் மாயவன்(2)
கலியுக முடிவினில் கல்கியாய் வருவான்(2)
எலியுரு வாகனன் கணபதி மாமன்(2)

(ஆளியும் வளையும்)
(ஆழ்கடல் தன்னில்)
(ஆளியும் வளையும்)

**5.கண்ணனைக் கண்டோம் என்று**

கண்ணனைக் கண்டோம் என்று
களிப்பேருவகை கொண்டு
கண்ணனின் கோயில் வாயில் (2)
கூடினர் அடியார் எல்லாம் (2) (கண்ணனைக்...)

கண்ணனைக் காண நானும் கருதியே கண்திறந்தேன்(2)
கண்ணனைக் கண்டேன் இல்லை கற்சிலை ஒன்று கண்டேன்(2)
மாயவா கேசவா உனைக்காணவே(2)
மல்வில் தல வாசலிலே நானும் வந்தேனே(2) (கண்ணனைக்...)

கண்ணனைக் காணக்கோடி கண்கள்தான் வேண்டும் என்றே(2)
கண்ணனின் கோயில் வாயில் கதறி நான் ஏந்திநின்றேன்(2)
மாயவா கேசவா உனைக்காணவே(2)
மல்வில் தல வாசலிலே நானும் வந்தேனே(2)(கண்ணனைக்...)

கண்ணனைக் காணக்கோடி கண்கள்தான் வேண்டிடுமோ(2)
கடமையேகண்ணாய் உள்ளார் கண்ணனைக் காண்பார்என்றார்(2)
மாயவா கேசவா உனைக்காணவே(2)
மல்வில் தல வாசலிலே நானும் வந்தேனே(2)(கண்ணனைக்...)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

6. பச்சிலையில் பள்ளி கொள்ளும் பரந்தாமா

பச்சிலையில் பள்ளி கொள்ளும் பரந்தாமா - நீ (2)
பச்சிலை பள்ளியிலே பள்ளி கொண்ட மாயமென்ன (2)
எச்சிலை உண்டவனே மைத்துணனே கண்ணாநீ (2)
கற்சிலையாய் நின்று கருணை மழை பொழிவாயே (2)
(பச்சிலையில்....) (2)

சங்கோடு சக்கரமும் கையிலேந்தி வந்திட
சங்கடங்கள் தீர்த்திடவே எங்கள் மாயனாரே
பட்டதுயர் காற்றாக பறந்திடவே மாயனாரே
கண்திறந்து பார்த்திடனும் எங்கள் மாயனாரே
ஆழியவளைதனிலே ஆனந்தமாய் அமர்ந்தவனே
எம்மைக்காக்கும் நாயகனே மல்வில் உறை மாயவனே(2)
(பச்சிலையில்....)(2)

கார்சூழ்ந்த நீலநிற மேனி கண்ணா
தேரேறி பாரதபோர் முடித்தவா
ஆழ்கடலில் அழகுறவே தீர்த்தமாடும் மாயனாரே
அடியவரின் குறைதீர்க்கும் எங்கள் மாயனாரே
ஆழியவளைதனிலே ஆனந்தமாய் அமர்ந்தவனே
எம்மைக்காக்கும் நாயகனே மல்வில் உறை மாயவனே(2)
(பச்சிலையில்....)(2)

7.மாயவா கேசவா நாராயணா ஓம் ஓம்

மாயவா கேசவா நாராயணா ஓம் ஓம்
மல்வில் வீதியிலே மாயவானர் தேரேறி(2)
செல்லும் காட்சியினைக் கண்டுகழித்திடடி(2)
கொட்டுமேளம் கொட்டுதடி கோயில்மணி ஒலிக்குதடி(2)
கட்டழகர் கண்ணன் அவன் தேரில் ஏறி வாறான்டி(2)
(மல்வில் வீதியிலே)(2)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கண்ணனின் வடம் பிடித்து அரோகரா என்று இழுக்க(2)
அன்பனின் பின்னே அவன் ஓடிஓடி வாறான்டி(2)
போட்டி பொறாமையை கூண்டோடு அழித்திடவே(2)
காட்சியளிப்பானடி கண்ணன் அவன் தேரேறி(2)
(மல்வில் வீதியிலே)(2)

மாங்கல்யம் வேண்டுமோ மழலைப்பேறு வேண்டுமோ(2)
என்ன வரம் வேண்டும் நீ தேரடிக்கு வந்திடடி(2)
வேண்டும் வரம் தருவானடி வேதனைகள் தீர்ப்பானடி(2)
வேண்டுதலைச் சொல்லி சொல்லி பாதம் தொட்டு
வணங்கிடடி(2)
(மல்வில் வீதியிலே)(2)

## 8.கோவிந்தன் பெயரை நாம் கூசாமல் கூறிடில்

கோவிந்தன் பெயரை நாம் கூசாமல் கூறிடில் (2)
நாவில் வந்துறைந்தவன் நற்றமிழ் நல்குவான் (2)
கோவிந்தா மாயவா மாதவா கேசவா (2)
மல்வில் பதியுறை நாராயணா நமோ (2)
(கோவிந்தன்) (2)

வீண்பகை நீங்கிவிடும் வீரம் தளைத்திடும்
வெற்றிகள் நிலைத்திடும் வேதனை விலகிடும்
நம்பிக்கையோடு அவன்
நாமத்தை செப்பிடில் (2)

மங்களம் பொங்கிடும் வானம் பொழிந்திடும்
சங்கோடு சங்கரனின் நாமத்தை செப்பிடில்
கோவிந்தா மாயவா மாதவா கேசவா(2)
மல்வில் பதியுறை நாராயணா நமோ (2)
(கோவிந்தன்) (2)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

செல்வங்கள் பெருகிடும் இன்பங்கள் நிலைத்திடும்
மாயவன் கரமது நேசமாய் துணைவரும்
அன்போடு அன்பன் அவன்
அடியேனைத் தொழுதுவிடின் (2)

ஆழ்கடலில் தீர்த்தமாடி அடிமேல் அடிவைத்து
வீதியில் வலம் வரவேண்டுதல் நிறைவேறும்
கோவிந்தா மாயவா மாதவா கேசவா(2)
மல்வில் பதியுறை நாராயணா நமோ (2)
(கோவிந்தன்) (2)

9.மல்வில் உறைபவனா மாயவனே உன்னை நிதம்

மல்வில் உறைபவனா மாயவனே உன்னை நிதம் (2)
சொல்லில் வினை அகலும் தூயவனே கண்ணா (2)

கண்ணா கண்ணா என்று பாஞ்சாலி கதறி அழ (2)
வண்ண வண்ண சேலை நல்கி மானமதை காத்தவனே (2)
(மல்வில் உறை)

பார்த்தனுக் சாரதியாய் பாண்டவரைக் காத்தவனே
பார்தனிலே எம்மை நிதம் பக்குவமாய் காப்பவனே
(மல்வில் உறை)

ஆழிவளைதனிலே ஆழ்கடலில் தீர்த்தமாடி(2)
அடியவர்க்கு அருள் சுரக்கும் ஆயர்பாடி மாதவனே (2)
(மல்வில் உறை)





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## 10 மாயவனின் புகழ்பாடிடவே

மாயவனின் புகழ்பாடிடவே இந்த (2)
மானிடனால் ஆகிடுமோ (2)
உந்தன் புகழ்தன்னைப் பாடிடவே என்றும் (2)
எமக்கருள் தருவாய் மாயவனே (2)

சங்கொலியுடன் வந்த இடம் சங்குகேணியான இடம் (2)
என்றும் இங்கே அடியவனாய் அணைத்து காத்து நிற்கின்றதே(2)
இராமனொடு இலக்குமணனும் தொழுத இந்த தலத்தையே(2)
இலக்குமணனும் பைரவனும் காத்து தானே நிற்கின்றான் (2)

மரத்தாலே கிணறு கட்டி - எங்கள் (2)
மாயவனுக்கு பூஜை செய்தோம் (2)
மகிமை பெற்றது இத்தலமே ஆகும் (2)

மாயவன் ஆடிடும் தடாகத் தீர்த்தம் (2)
நோய்நொடிகள் தீர்த்திடும் அருமருந்தே ஆகும் (2)
சிவனோடு மாயவனும் சேர்ந்துறையும் இத்தலத்தை (2)
முறையாக தொழுதிட்டால் குறையேதும் இல்லையே (2)

ஆலிலையில் பள்ளிகொள்ளும் பரந்தாமன் - அந்த (2)
ஆலிலையே தலவிருட்சம் ஆக கொண்டவன் (2)
மூர்த்தி தல தீர்த்த மகிமை கொண்ட (2)
இத்தலத்தின் பக்திசுவை சொட்ட சொட்ட (2)
பாடி அவனருள் பெறுவோமே .(2)





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பெரியபளையூர்

**அமரசிங்கம் கேதீஸ்வரன்** அவர்களின்

எண்ணத்திலிருந்து உருவான

## மல்வில் உறை நாயகனே

மல்வில் பதி அமைந் தெங்கள்
மனதுக்கு தென்பு தந்தாய்
அல்லும் பகலும் காத்து எம்மை
அவனியில் வாழவைக்கும் சொல்லுமிடர் ஓடிவிட
துணையமர்ந்து வாழ்வளிக்கும்
மல்வில் உறை நாயகனே
மனதுருகப் பாடுகின்றோம் - உம்மை
மனதுருகப் பாடுகின்றோம்

தென்னங்குலை தேங்காய்கள்
தெருவெங்கும் மகிழ்ச்சிதர
வண்ணமுயர் பனைகளது
வளங்களினால் உயர்ச்சிபெற்ற
மண் அமைந்து வாழ்வளிக்கும்
மல்வில் உறை நாயகனே
உன் அருளால் உயர்ந்து நின்று
உவகையுடன் பாடுகின்றோம்

ஆநிரைகள் கால்நடைகள்
அள்ளி இங்கு பால் சொரிய
தேன் நிறைந்த முக்கனிகள்
தினம் கனிந்து சுவைபருக
மல்வில் உறை நாயகனே
மனதமர்ந்த நாராயணனே
அள்ளி உனை போற்றுகின்றோம்
அல்லல் துயர் தீரத்தருள்க.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பச்சிலையில் பள்ளி கொண்ட – கண்ணன்
பச்சிலையில் பள்ளி கொண்ட
பழம் பெருமை கொண்ட நகர்
உச்சம் தொட உழைத்து நின்ற
உத்தமர்கள் வாழ்ந்த நகர்
துச்சமென துணிந்து வந்த
இராமர் படை ஓய்வெடுத்து
கச்சிதமாய் பூசை செய்த

காவியத்தின் திரு நிலத்தில்
மல்வில் எனும் நாமம் கொண்டு
மகிழ் தெழுந்த நாயகனே நாராயணா என்று
நாமமிட்டு வாழ்த்துகின்றோம் ஓராயிரம் தடவை
உச்சரித்து போற்றுகின்றோம்
வாயாரப் பாடி உம்மை வாழ்வளிப்பாய் என்றழைத்து
வாழ்த்துகின்றோம் போற்றுகின்றோம்
ஹரே கிருஸ்ணா ஹரே ராமா

மல்வில் குளக்கரையில் மலர்ந்த முகத்துடனே
அல்லல் அறுத்தாட்கொள்ளும் ஆலயத்து நாயகனே
மல்வில் கிருஸ்ணர் என்ற மகாபாரதத்து கூத்துகனே
உள்ளத்துயர் களைந்து உறுதியளிப்பவனே
உந்தன் திருவடியில் பணிந்தோம் மனம் நிறைந்தோம்
உயர்வோம் நாம் என்றும் உத்தமராய் தேசமெங்கும்.





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அல்லிப்பளையூர்

## இரத்தினசிங்கம் கோகுலராகவன் அவர்களின்

## ஆனந்த காணம்

### ஆயிரம் நாவில் இன்று


நான் அந்த சுகத்தை தேடி வந்தேன்
நான் அந்த சுகத்தை தேடி வந்தேன் (2)

நெஞ்சினில் அகலாத நாமம் அது மல்வில், என்றால் போதும்
கண்ணில் தெரியும் ரூபம் அது
கண்ணன் என்றே தோன்றும்
பாதம் உன்னடி பட்டதாலே
நாதம் நிதம் உருவாகும்
பேதம் இல்லா அருளாலே
உன்கீதம் எங்கும் கேட்கும்

(ஆனந்த காணம்)

உன் கீதையிலே மனம் லயிக்கும்
நற்பாதையிலே போக வைக்கும்
வீண்ஆசையிலே நான் இனி வாழ மாட்டேன்.
உன் கோவிலிலே காலம் முழுவதும்
தஞ்சம் ஆனேன் தஞ்சம் ஆனேன்

(ஆனந்த காணம்)





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## ஆலய உற்சவங்கள், விசேட தினங்கள்.

### தை

தைப்பொங்கல்- பொங்கல் விசேடபூஜை
தைப்பூசம் - புதிர் வழங்கல், வித்தியாரம்பம்

### மாசி

பீம ஏகாதசி - புராணபடிப்பு, விசேட உற்சவம்
மஹா சிவராத்திரி - விசேட உற்சவம்
அடியார்கள் பால் அபிஷேகம்
அறநெறிச் சமூகவிழா

### சித்திரை

புதுவருடப்பிறப்பு - பொங்கல், விசேட பூஜை
கைவிசேடம் வழங்கல்

### ஆனி

மஹா கும்பாபிஷேக தினம் - சங்காபிஷேகம் (1008)
(பொது உபயம்)

### ஆடி

வரலஷ்மி பூசை - விசேட பூசை, சுமங்கலிபூசை
(பொதுஉபயம்)

### ஆவணி

1ம் திருவிழா - ஆரம்ப உற்சவம், சங்காபிஷேகம் (108)
2ம் திருவிழா - இரண்டாம் நாள் உற்சவம்
3ம் திருவிழா - சுற்றுபிரகார தரிசனம்
4ம் திருவிழா - வெண்ணெய் திருடல்
5ம் திருவிழா - துகில் உற்சவம்
6ம் திருவிழா - சற்ப உற்சவம்
7ம் திருவிழா - மஹாகம்சன் போர்
8ம் திருவிழா - வேட்டை
9ம் திருவிழா - சப்பரம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

10ம் திருவிழா - தேர்
11ம் திருவிழா - சமுத்திர தீர்த்தம்
12ம் திருவிழா - தடாகதீர்த்தம்
வைரவர், ஆஞ்நேயர் மடை
இலச்சுளான் வைரவர் மடை

* ஸ்ரீ கிருஷ்ண ஜெயந்தி - கண்ணன் பிறப்பு உற்சவம்

**புரட்டாதி**
* மஹா சனீஸ்வரர் ஹோமம் - விசேட அபிஷேகம் (பொது உபயம்)
* நவராத்திரி - விசேட பூசை, வித்தியராம்பம்

**ஐப்பசி**
* தீபாவளி - விசேட உற்சவம், நரகாசுரன் போர்

**கார்த்திகை**
* விளக்கீடு - விசேட பூசை. தீபமேற்றல்

**மார்கழி**
* வைகுண்ட ஏகாதசி - புராணப்படிப்பு, விசேட உற்சவம்,
* திருவெம்பாவை - விசேட பூசை,
* திருப்பள்ளியெழுச்சி,திருப்பாவை, திருவெம்பாவை ஓதுதல்

## ஆலயப்பணிகள்
* ஆன்மீகப்பணி
* அறப்பணி
* சமூகப்பணி
* அறநெறிப்பாடசாலை

**ஆன்மீகப்பணி**
* விசேட பூசைகள்
* உற்சவங்கள்
* விசேட தினங்கள், பண்டிகைகள்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

* புராணங்கள் ஓதுதல்- பயன்கூறல்
* அடியவர்கள் நேர்த்திக்கடன்களை நிறைவேற்றுவதற்கு வழிவகுத்தல்
* விசேட யாகம் நடாத்தல்

## அறப்பணி

* ஞாயிற்றுக்கிழமைகள், புரட்டாதிச் சனிக்கிழமைகளில் அன்னதானப்பணி
* அறநெறிச் சமூக விழா
* அறங்காவலர்தினம்
* உற்சவகாலம், விசேட தினங்களில் தாக சாந்தி, இரவு
* உணவு வழங்கல்
* கோமாதா பராமரிப்பு

## சமூகப்பணி

* அமரர் இராஜலிங்கம் நினைவு வளாகத்தில் கிராம வளர்ச்சிக்கு காணி வழங்குதல் (பொதுமண்டபம், முன்பள்ளி, ஆரம்பசுகாதார நிலையம், குடிநீர் விநியோகம், உள்ளூர் உற்பத்தி நிலையம்)
* வீதியமைப்பு - ஆரம்ப மூலப்பொருள் வழங்குதல் (புளியடி, கோண்டாவில், சங்குகேணி)

## அறநெறிப் பாடசாலை

* அறநெறி வகுப்புகள் நடாத்துதல்
* அரசாங்க பரீட்சைகளுக்கு மாணவரை பங்குபற்ற செய்தல்
* அறநெறி பொதுப்போட்டிகளுக்கு மாணவரை பங்குபற்ற செய்தல்
* மஹா சிவராத்திரி தின போட்டிகள் நடாத்துதல்
* ஆன்மீக சுற்றுலாவிற்கு மாணவர்களை அழைத்துச்செல்லல்
* ஆலய உற்சவகாலங்களில் மாணவர் கலை நிகழ்வுகளை மேடையேற்றுதல்.
* உற்சவகாலங்களில் பொதுஅறிவுப் போட்டிகளை நடாத்தி பரிசில் வழங்குதல்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உபயங்கள்
* தனிநபர்/ குடும்பம்/ கிராமம்/ பிரதேசம் போன்ற ரீதியாக நடைபெறுகின்றது.

<u>அடியவர்/ பொதுமக்கள் பங்களிப்புடன் நடைபெறும் உபயங்கள்</u>
* மஹா கும்பாபிஷேகதின, சங்காபிஷேக பெருவிழா
* வரலஷ்மி பூசை
* மஹா சனீஸ்வரர் ஹோமம்

<u>விழாக்கள்</u>
* அறநெறிச் சமூகவிழா
* அறங்காவலர் தினம்

## அறக்கட்டளை 2023

தலைவர் திரு. ஆ. இராசரத்தினம் (ஓய்வுபெற்ற தபாலதிபர்)
செயலாளர் திருமதி. கு. பிரதாபராஜன் (ஓய்வு பெற்ற கிராம அலுவலகர்)
பொருளார் திரு. சி. வல்லிபுரம் (ஓய்வு பெற்ற கிராம அலுவலகர்)
உறுப்பினர்கள் திருமதி சி. இரத்தினம் (தர்மகர்த்தா)
திரு. சி. கமலரூபன் (குடும்ப உறுப்பினர்)
திரு. க. சுந்தரலிங்கம் ஓய்வுநிலை பிரதிஅதிபர்)
திரு .ஆ. ஆனந்தரூபன் (அஞ்சலர்)
திரு. கி வரதீஸ்வரன்
திரு. ச. பகீரதன்

ஏற்பாட்டு குழு திரு. க. வன்னிய சிங்கம்
திரு. இ. சிவராசா
திரு. பா. கமலம்மா
திரு. செ. இராசரத்தினம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org













திருக்கணிதம், சாவகச்சேரி. T.P: 0773248817

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org